நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 100 /2024

## P.W. 10 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுப்ரமணி |
| தந்தை / கணவர் பெயர் | : | சாமிகண்ணு |
| கிராமம் | : | காவேரிநகர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 10 |
| வயது | : | 49 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 29–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.17 PM.

1. ( இரு தரப்பு வாதங்களும் கேட்கபட்டது. செல்போன்மூலம் எடுக்கப்பட்ட வீடியோ பதிவு வாட்சப்மூலம் அனுப்பட்டு வாட்சப்மூலம் பெறப்பட்டு சம்பந்தபட்ட சாட்சியால் பதிவு இறக்கம் செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாக்கல் செய்தவற்காக பாரத சாட்சிய சட்டம் பிரிவு

63(4)(c)ன்படி சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பென் டிரைவின் குறியீடுசெய்ய மேற்படி பென் டிரைவில் உள்ள வீடியோ யார் மூலம் எடுக்கப்பட்டது. அதன் அசல் என்னவானது, யாரால் சம்பந்தபட்ட நபருக்கு வாட்சப்மூலம் அனுப்பபட்டது போன்ற விவரங்கள் தகுந்த ( Proper custody) இருந்து பெறப்பட்டு தாக்கல் செய்யப்படாததாலும், பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட அசல் மின்னனுகருவியில் இருந்து பதிவு இறக்கம் செய்யப்படவில்லை என்பதாலும், அதை ஒரு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது என கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இரண்டாம் நிலை சாட்சியமாக குறியீடு செய்யும்போது மேற்படி அசல் மின்னனு கருவியை ஆஜர் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டது. (**மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டும், மேற்படி பென் டிரைவின் உள்ளடக்கத்தில் உள்ள நிகழ்வுகள் எந்த தேதியில் எப்போது நடைபெற்றது என்பதையும் அது எந்த வகையில் இந்த வழக்கிற்கு தொடர்பு பட்டது என்று நிரூபணம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் பாரத சாட்சிய சட்டம் பிரிவு 141(3)ன் படி அனுமதி அளித்து மேற்படி தாக்கல் செய்யப்பட்ட பென் டிரைவின் உள்ள வீடியோ பதிவு சம்பந்தபட்ட பாரத சாட்சிய சட்டம் பிரிவு 63(4)(c)ன் படியான சான்றிதழ் அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மேற்படி கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தெரிவித்த ஆட்சேபணை குறித்து தீர்ப்பின்போது பரிசீலினை செய்யப்படும்.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மேற்படி பென் டிரைவில் வீடியோ பதிவு செய்து கொடுத்தற்காக நான் கட்டணம் பெற்று கொண்டதற்கான ரசீது எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. நான் எப்போது முதல் கடை வைத்துள்ளேன், அதற்கான உரிமம் எப்போது பெறப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 10 ஆவணத்தை நான் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

2. மேற்படி அ.சா.ஆ10 சான்றிதழில் 05.04.2025ம் , தேதியிட்டு நான் கையெழுத்து

செய்துள்ளேன் என்றால் சரிதான். யார் தட்டச்சு செய்து கொடுத்தார் என்றால் அ.சா.1. சேட்டு என்பவரின் வழக்கறிஞர் திருமதி கோகிலவாணி என்பவர் தான் கொண்டு வந்து கொடுத்தார். யார் தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி 05.04.2025ம் தேதிக்கு சுமார் 2 மாதங்களுக்கு முன்பாக மேற்படி குறியீடு செய்யப்பட்ட பென் டிரைவில் பதிவு செய்து கொடுத்தேன்.

3. நான் கொடுத்த சான்றிதழில் 15.02.2023ம் தேதி பதிவு செய்ததாக குறிப்பிட்டு இருந்தால் அது தவறு. சம்பவமே 18.02.2023ம் தேதி நடந்ததாக இந்த வழக்கில் குறிப்பிடும்போது அதற்கு முன்னால் 2 நாட்களுக்கு முன்பாகவே மேற்படி வீடியோவை பதிவு செய்து நான் பதிவு இறக்கம் செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு தண்டனை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அது காசோலை வழக்கு அது பணம் கொடுத்து பைசல் செய்துவிட்டேன்.

4. நான் சொல்வது போல் கடை எதுவும் வைத்திருக்கவில்லை என்றாலும், என்னிடம் கணினி எதுவும் இல்லை என்றாலும், கணினி சம்பந்தமாக நான் எதுவும் படித்திருக்கவில்லை என்றாலும், யாராவது சான்றிதழ் கேட்டால் கையெழுத்து போட்டுவிட்டு சாட்சியம் அளிப்பது வழக்கம் என்றால் சரியல்ல. நான் கொடுத்துள்ள பென் டிரைவ் மற்றும் சான்றிதழ் பொய்யானது என்றால் சரியல்ல. தவறான லாபம் அடைய வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.17PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**